முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1662

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**17.04.2024,** புதன்கிழமை

1. தர்மனே கலியுகத்தின் காவலனே
   தவசியே உலகை மாற்ற வந்த ஞானியே
   பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
   பிரணவக் குடில் படைத்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 04 ம் நாள், 17.04.2024, புதன்கிழமை)
   வரமாக அரங்கனுக்கு சக்தியூட்டி
   வடிவேலன் யான் நித்தம் காத்துவர
3. வருகவே அரங்கனுக்கு பிரம்மவேளையில்
   அனுதினம் ஆறுமுகன் என் சூட்சும சக்தி பரவிவர
   வருகின்ற காலம் அன்பர்கள் அரங்கனைத் தேடி
   வல்லமைபட சர்வ தீட்சை ஏற்றால் போதும்
4. ஏற்ற மக்கள் அனைவருக்கும்
   எல்லா வளமும் வரமாகக் கிட்டி இனிதே
   வருபவர்கள் நோக்கம் பூர்த்தியோடு
   வல்லமைபட வருங்காலம் அவர்களெல்லாம்
5. அரங்கன் வழியில் ஞான வாழ்வு கொண்டு
   ஞான யுகமாற்றக் காலம்
   ஞான ஆட்சிக் காலம்
   அவர்களும் ஞானவான்களாய் பங்களிப்புப் பெற்று
6. அரங்கன் வழி உலகமாற்றம் நிகழ்த்த ஏதுவாக
   உலகில் பங்களிப்பு கொள்ள நேரும்
   நேர்மைகொண்டு அரங்கன் தொடர்பு கொண்டு நிலஉலகில்
   நிலவுலகில் தர்மத்தில் உதவி நின்றால் போதும்

7. வருபவர்க்கெல்லாம் வினை நீக்கமோடு
வையகத்தில் வறுமை நீக்கும் வல்லமையும் கூடி
கூடியே இந்த பேருலகில்
குரு அரங்கன் வழி ஈடேற்றம்

8. ஞான ஆட்சிக் காலமாக
ஞான யுக மாற்றமாக
ஞான சித்தர் காலமாகவும் மாற்றம் காணும்
விளம்பிய ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—